இராணுவத்தில் வீரதீர மற்றும் போற்றத்தக்க செயல்கள் புரிந்தவர்களுக்கான பண முடிப்பை நான்கு மடங்காக உயர்த்தி

# ரூ.60 ஆயிரம் முதல் - ரூ.1 கோடி வரை வழங்க முதல்வர் ஆணை!

## சட்டப் பேரவையில் - 'முன்னாள் படை வீரர் நலன்' மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 2 - சட்டப் பேரவையில், 'முன்னாள் படைவீரர் நலன்' மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், " இராணுவத்தில் வீரதீர மற்றும் போற்றத்தக்க செயல்கள் புரிந்தவர்களுக்கான பண முடிப்பை நான்கு மடங்காக உயர்த்தி - ரூ.60 ஆயிரம் முதல் - ரூ.1 கோடி வரை வழங்க முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்" என்று அறிவித்தார்.**



அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கிய பதிலுரை வருமாறு:

முன்னாள் படைவீரர் நலன் முப்படை வீரர்கள் தங்களது, வீரம், நாட்டுப் பற்று ஆகியவற்றை வெளிப்படுத்தி, நமது தேசிய ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றனர். தமிழ்நாட்டில் சுமார் 1,23,525 முன்னாள் படைவீரர்களும், 56,922 கைம்பெண்களும் வசித்துவருகின்றனர். கொடி நாள் நிதி வசூலில் கடந்த 16 ஆண்டுகளாக தொடர்ந்து, நாட்டிலேயே தமிழ்நாடு முன்னிலை வகித்து வருகிறது. 2022 - 2023 ஆம் ஆண்டில், கொடி நாள் நிதிக்காக, 59.61 கோடி ரூபாயை நமது தமிழ்நாட்டு மக்கள் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள் எனபதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, முன்னாள் படைவீரர்களுக்கு தமிழ்நாடு அரசு பணிகளில் ஒதுக்கப்பட்ட சிறப்பு இடஒதுக்கீட்டின்கீழ், 1063 முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. படைவீரர்களைச் சார்ந்தோருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு 94 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்த பிறகு மாதாந்திர நிதியுதவிகள், மருத்துவ நிதியுதவிகள் மற்றும் கல்வி உதவித்தொகை போன்ற நலத்திட்டங்கள் மூலம், 52,361 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு ரூ.124.84 கோடி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணுவத்தில் சேவையாற்றுவதற்கு வீரர்களை அனுப்புவதில் நமது மாநிலத்தில் உள்ள வேலூர் மாவட்டம் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கிறது. இம்மாவட்டத்திலுள்ள படைவீரர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்களின் சேவையை போற்றி, பாராட்டும் வண்ணம் வேலூரில் நினைவுச் சின்னம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### படைவீரர்கள், முன்னாள் படைவீரர்களின் சேவையைப் போற்றிப் பாராட்டும் வகையில் - வேலூரில் நினைவுச் சின்னம்!

கருணைத்தொகை வழங்கும் திட்டம் 1971ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் தொகையானது பல காலகட்டங்களில் உயர்த்தப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு ஆணை எண்.260 பொது (இராணுவம்)த் துறை நாள்: 19.4.2023 ன்படி, இரண்டு மடங்காக உயர்த்தி போரில் வீரமரணமடைந்தோரின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 40 இலட்சமும், இரண்டு கை அல்லது கால்களை இழந்தவர்கள் அல்லது முற்றிலும் கண்பார்வை இழந்தவர்களுக்கு ரூபாய் 30 இலட்சமும், ஒரு கை அல்லது கால் மற்றும் ஒரு கண்பார்வை இழந்தவர்களுக்கு ரூபாய் 20 இலட்சமும் வழங்கப்படுகிறது. இராணுவத்தில் வீரதீர மற்றும் போற்றத்தக்க செயல்கள் பணிபுரிந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பணமுடிப்பு தொகையினை, அரசு ஆணை எண்.259 பொது (இராணுவம்)த் துறை நாள் 19.4.2023ன்படி, நான்கு மடங்காக ரூபாய் 60 ஆயிரம் முதல் ரூபாய் 1 கோடி ரூபாய் வரை உயர்த்தி வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

முன்னாள் இராணுவ வீரர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, வீட்டு வரி விலக்கு வழங்க வேண்டும் என்பதை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் இந்தாண்டு செயல்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடு அறிக்கையில், வீட்டு வரித் தொகையினை மீளப்பெறும் திட்டத்தினை அனைத்து முன்னாள் படை வீரர்களுக்கும் நீட்டிப்பு செய்திட அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் வசிக்கும் வீட்டிற்காகச் செலுத்தும் வீட்டு வரியினை ஒரு வருடத்திற்கு (இரண்டு அரையாண்டு) அதிகபட்சம் ரூ.10,000/ (அல்லது) செலுத்தப்பட்ட அசல் தொகை, இவற்றில் எந்தத் தொகை குறைவாக உள்ளதோ, அத்தொகையினை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஈடுசெய்து வழங்கப்படுவது தொடர்பாக, அரசாணை எண்.169 பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள் 27.2.2024ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்புகள்**

1. மாற்றுத்திறன் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரை சார்ந்தோர்களுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பிரத்யேக பெட்ரோல் ஸ்கூட்டர்/ சிறப்பு நாற்காலிகள் இலவசமாக வழங்கப்படும்.

மாற்றுத்திறன் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரை சார்ந்தோர்களின் வாழ்க்கை நடைமுறையை சுலபமாக்கும் நோக்குடன் அவர்களின் அன்றாட தேவைகளை அவர்களே பூர்த்தி செய்திட, தேவைக்கேற்ப இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட அல்லது சிறப்பு பேட்டரி சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்படும்.

2. தையல் பயிற்சி சான்று பெற்றுள்ள முன்னாள் படைவீரரின் மனைவி/கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கப்படும்.

முன்னாள் படைவீரரின் மனைவி/ கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் தையற் பயிற்சி சான்று பெற்றிருப்பின், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கப்படும்.

2 வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொண்டு அனைத்து அதிகாரிகளுக்கும் வீட்டு வரி விலக்கை அறிவிக்க முக்கியக் காரணமாக இருந்த நிதித் துறை செயலாளர், உதயச் சந்திரன் அவர்களுக்கும் மற்ற அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட விக்கிரவாண்டி மத்திய ஒன்றியத்தில், ஒதுக்கப்பட்டுள்ள பாகங்களில் தேர்தல் பணி குறித்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் ஆலோசித்தார். உடன் கழக சட்டத்திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெகதீசன், அரியலூர் மாவட்டக் கழக துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், நல்லதம்பி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், கழக தோழர் குமார், உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட

# தி.மு.க மாணவர் அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் க.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது!

*தஞ்சாவூர், ஜூலை 2 - தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், கும்பகோணம் பாலக்கரை மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.*

*மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அறிவுரையின் பேரில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில் குமார் தலைமை வகித்தார்.*

*மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ் வினோத், சூர்யா, இலக்கியா, தேவராஜன் ஆகியோர் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்.*

*கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :*

*1. கழக மாணவர் அணி சார்பில் வரும் 3.7.2024 அன்று காலை 9.00 மணி அளவில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் நீட் தேர்வை கண்டித்து நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக பெருந்திரளாக கலந்து கொள்ளுவது என்றும்*

*2. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை குழந்தைகள் பிரிவுக்கு சிகிச்சை பெற வருகை தரும் குழந்தைகள் அச்சத்தை போக்கும் வகையில் உளவியல் ரீதியாக குழந்தைகள் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் உணர்ந்து மகிழ்ச்சியடையும் வகையில் விளையாட விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது என்றும்*

*3. திருவிடைமருதூர் கும்பகோணம் பாபநாசம் ஆகிய பகுதியில் விளையாட்டு போட்டியில் பங்கு பெறுவதற்கும் போட்டி தேர்வில் பங்கு வருவதற்கும் உடற்பயிற்சி பெறுவதற்கு விளையாட்டு அரங்கம் தேவை என்று மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் மினி ஸ்டேடியம் அமைக்க சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

தஞ்சை மாவட்டம் – கும்பகோணம் தலைமை அரசு மருத்துவமனைக்கு

# மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டி கொடுப்பீர்!

## சட்டப் பேரவையில் சாக்கோட்டை க.அன்பழகன் வலியுறுத்தல்!

*சென்னை, ஜூலை 2 - சட்டப் பேரவையில் கும்பகோணம் தொகுதி உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே. என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:*



**க. அன்பழகன்:** *தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தலைமை அரசு மருத்துவமனையில் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிற அளவில் அங்கே உள்நோயாளிகள் 1,100 பேரும், புறநோயாளிகள் 3000 பேருக்கு மேல் இருக்கிறதால் மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவாவது அல்லது அதற்கு மேலாக ஒரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டி கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**அமைச்சர் கே.என். நேரு:** *மருத்துவமனையிலே தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை கவனத்தில் கொண்டு அதிகாரிகளை அனுப்பி அதை எப்படி செய்ய முடியும் என்பதை அறிந்து அவர்களுக்கு தகுந்த பதில் சொல்லி, விரைவாக செய்வதற்குரிய ஒரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டுமென்று சொன்னால், கட்டப்பட வேண்டிய இடத்தில், அதை estimate செய்வதற்கு எப்படியும் ஒரு மாதம், இரண்டு மாதம் ஆகிவிடும். எனவே, அதைப்பற்றி முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.*

'திராவிட மாடல்' அரசின் நலத்திட்டங்கள் குறித்து

# பொதுமக்களிடம் கருத்து கேட்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறதா?

## சட்டப் பேரவையில் இரா.இளங்கோ கேள்வி!

*சென்னை, ஜூலை 2 - சட்டப் பேரவையில் அரவக்குறிச்சி தொகுதி உறுப்பினர் இரா. இளங்கோ எழுப்பிய கேள்வியும் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அளித்த பதிலும் வருமாறு:*



**இரா. இளங்கோ:** *செய்தி, மக்கள் தொடர்புத் துறையில் பணிபுரியும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள்மூலம், திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்கள் குறித்து, பொதுமக்களிடம் கருத்து கேட்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.*

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன்:** *ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஏற்பாடு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், பத்திரிகையாளர்களையும் அழைத்துச் சென்று, திட்டங்களால் பயனடைந்து வரக்கூடிய பொதுமக்களிடத்தில் கருத்து கேட்டு, அந்த விவரங்களை அரசுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதற்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில், அதற்கு 'நிறைந்தது மனம்' என தலைப்பிடப்பெற்றிருக்கிறது. ஆகஸ்ட் மாதத்திலிருந்து அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.*

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட

# போளூர் வழியாக ஜவ்வாது மலைக்கு புறவழிச்சாலை அமைக்கப்படுமா?

## சட்டப் பேரவையில் பெ.சு.தி.சரவணன் கேள்வி!

*சென்னை, ஜூலை 2 - சட்டப் பேரவையில் கலசப்பாக்கம் தொகுதி உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:-*



**பெ.சு.தி. சரவணன்:** *கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைக்குச் செல்ல வேண்டுமென்றால், போளூர் மையப்பகுதியான பஜார் வழியாகத்தான் செல்ல முடியும். அங்கு எதிரில் அதிக அளவிலான கிராமங்கள் இருப்பதால் கரும்பு லோடு வாகனம் போன்று போக்கு வரத்து நெரிசல் காரணமாக கால விரயம் ஏற்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, போளூர் வழியாக ஜவ்வாது மலைக்கு ஒரு புறவழிச்சாலை அமைத்துத் தரப்படுமா என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் எ.வ.வேலு:** *அவர்கள் சொல்கிற ஜவ்வாது மலை என்பது அதைப்பற்றி அவை முன்னவர் அவர்களும் நானும் நன்கு அறிந்தவர்கள். ஏறத்தாழ, 260க்கு மேற்பட்ட கிராமங்கள் அந்த மலையில் இருக்கின்றன. அந்த மலைக்குப் போகவேண்டுமானால், போளூர் நகரப் பகுதிகளின் உள்வழியாகத்தான் போக முடியும்.*

*போளூர் நகரப் பகுதி வழியாகத்தான் செல்ல வேண்டும். போளூர் நகரப் பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் போக்குவரத்து நெரிசலாக இருக்கிற காரணத்தினால், போக்குவரத்து இடையூறுகள் இருக்கிறது என்பதை கழக ஆட்சியிலே தலைவர் அவர்கள் அறிந்த காரணத்தினாலேதான், சென்ற ஆண்டே இந்தப் பணிகள் அரசின் சார்பாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, ஏறத்தாழ இந்தப் புறவழிச்சாலை 3 கி.மீ. தூரம் வரை போட வேண்டும். ஆகவே அரசு முடிவு செய்யப்பட்டு, அதற்கான திட்டத்தை அறிவிக்க தயார் செய்வதற்காக 11 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டு, திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமுடிந்த உடனே புறவழிச் சாலை அமைப்பதற்காக முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு நிதி ஒதுக்கப்பட்டு, இந்த நிதியாண்டிலே முடிந்த வரை அந்தப் பணிகள் முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்தநாள் விழாவையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் ப.இளையகோபால் ஏற்பாட்டில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் செங்கோடம்பாளையம் அரிமா சொசைட்டி டிரஸ்ட் மாற்றுத்திறனாளிகள்சிறப்புபள்ளியில் காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் கழக கொள்கைப் பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாநில மாணவர் அணி துணை செயலாளர் வீரமணி, மாவட்டப் பொருளாளர் ப.க.பழனிசாமி, மாநகர மேயர் நகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் பகண்டை ஊராட்சியில் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நமது வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை அவர்களை ஆதரித்து வீடு, வீடாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மேகநாதன், விவசாய அணி இணைச் செயலாளர்கள் கல்லிப்பட்டி மணி, குறிஞ்சி சிவா, மாவட்ட அமைப்பாளர் சீனு செல்வரங்கம், பகண்டை வெங்கடேசன், சீனிவாசன், பாண்டியன் ,இளைஞர் அணி பாரதி, சுற்றுச் சூழல் அணி சம்பத்குமார், இராமதாசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

விக்கிரவாண்டி தொகுதியில்

# கழக வேட்பாளர் சிவாவை ஆதரித்து பிரச்சாரம்!

## தா.உதயசூரியன் – ஆ.அங்கையற்கண்ணி வாக்கு சேகரித்தனர்!

*விழுப்புரம், ஜூலை 2 - பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்,கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைப்படி, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, காணை வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கக்கனூர் ஊராட்சியில் பாகம் எண் 52, 53, 54, 55 ஆகிய பகுதிகளில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினருமான தா உதயசூரியன், மாநில மகளிரணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் கூட்டணி கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகளும் வீதி வீதியாக வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.*